RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s222610

# அகிலத்திரட்டு கூறும் நீதம் என்னும் நன்னெறிப் பண்புகள்

**து. வைகுண்ட கண்ணன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), நெய்யூர்-629802, தமிழ்நாடு, இந்தியா

# Righteousness in Ayya Vaikundar's Akilathirattu

**D. Vaikunda Kannan [a, *]**

[a] Department of Tamil, Lekshmipuram College of Arts and Science, Neyyoor-629802, Tamil Nadu, India

* Corresponding Author: kannanad85@gmail.com

Received: 22-09-2022
Revised: 07-11-2022
Accepted: 11-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

South India has been enriched with all all kind of resources. Ayya Vaikundar's work Akilathirattu says that the people who lived in south lived happily with Godly thoughts. The people did charitable deeds with the virtue of morals and the idea of attaining virtue, wealth, and pleasure at home. They lived happily and because of the people's observance of the three types of righteousness, all the devas prayed to the Lord that rain should be showered. The people who ruled the country ruled as simple and strong. He considered the country people as his people. The kings did good to the people and collected very low taxes. As the king ruled well, the wealth of the people increased and the memory of Shiva remained unchanged. People lived self-disciplined among themselves. One of the most important aspects of human life is the relationship of husband and wife. Women cherished their husbands more than their life and were proud of their commitment to chastity. Women are very genuine and realized that it was wrong to talk about their love life to God. Through this article, we can learn that those who follow the three principles will lead a good life.

**Keywords:** Akilathirattu, Ayya Vaikundar, God, Relationship

## முன்னுரை

மனிதன் நீதம் என்னும் நன்னெறியோடு வாழ வேண்டும். மனிதன் ஒழுக்கமுடையவனாக இருக்க நீதம் வேண்டும். மனுநீதம் மனித வாழ்வின் அடித்தளம். கட்டிடத்தின் அடித்தளம் சரியாக அமையாமல் கட்டிடம் கட்ட இயலாது. அதுபோன்று மனுநீதி இல்லாமல் மக்கள் செம்மையுடன் வாழ முடியாது. மனிதன் வாழ்வில் கடைப்பிடிக்கும் நன்னெறிகள் தான் வாழ்க்கைப் பாதையாகும். பாதை தவறினால் பயணம் நிறைவு பெறாது. உலகில் தோன்றிய மனிதன் தம் பாதையை நேராக வகுத்து இவ்வுலகில் பெருவாழ்வு வாழ்ந்து மறைந்த பின்பும் தம் பெயர் நிலைக்க நீதங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. அறவழியில் பொருள் ஈட்டி இன்பமுடன் வாழ்ந்து வீடுபேறு அடைய நீதங்கள் அவசியமாகின்றன. எனவே வைகுண்டர் தாம் அருளிய அகிலத்திரட்டில் மூவகையான நீதங்களைப் பற்றி தெள்ளத்தெளிவாக குறிப்பிட்டுள்ளார். அவற்றை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நீதங்கள்

ஒழுக்கம் என்னும் நீதத்தத்துடன் வாழ்பவர்கள் தன்னந்தன்னால் சிறப்புடன் இருந்து வாழ்வார்கள். மக்கள் மனுநீதி என்னும் நீதத்தோடு வாழ்ந்தமையால் நாட்டில் மாதம் மும்மாரி மழைப்பொழிந்தது என்று அகிலம் உரைக்கிறது. மேலும் நீதத்தினை, தெய்வநீதம், இராசநீதம், மனுநீதம் என மூவகையாகப்பிரித்து மூன்றையும் கடைப்பிடித்து வாழ்பவர்கள் தன்னந்தன்னால் சிறப்புடன் வாழ்வார்கள் என்பதை,

"வண்ணமாய் நீத மூன்றும் வரம்பணுவிலகி டாமல்

தண்ணமா யிருந்துவாழுஞ் சனங்களே பதற வேண்டாம்

திண்ணமாய்த் தன்னந் தன்னால் சிறப்புட னிருந்து வாழ்வீர்"

என்ற வரிகள் மூலம் அறியமுடிகிறது (Muthukutti Swamigal, 1963).

## தெய்வநீதம்

ஆயிரத்து எட்டு ஆலயங்களுக்கும் வகுப்பு பூசை முடங்காது செய்தும், கோவில் கிணறு, களம் அழியாமல் பாதுகாத்தும், எளியவர் வலியவர் என்று பாராமல் உண்மையை உரைத்தும் வந்தனர். மன்னனும் மக்களும் நீதத்தோடு வாழ்ந்தமையால் தேவர்கள் எல்லோரும் கூடி வருணனை அழைத்து மாதமும்மாரி பொழிய வேண்டும் என்றும், எமன் இல்லாத உலகமாக மாறவேண்டும் என்றும், நித்திராதேவி (மூதேவி) அவ்வூரில் இல்லாமல் போக வேண்டும் என்றும், சூரியனும், சந்திரனும் நிலைதடுமாறாமல் உதிக்கவும் மக்கள் மானத்தோடு வாழவும் அருள் புரிய வேண்டும் என சிவபெருமானையும், திருமாலையும் வேண்டி நின்றதை அறிய முடிகிறது.

## இராசநீதம்

மன்னனின் ஆட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணம் வகுத்தவன் சோழன். அம்பால் அடிப்பட்ட புறாவுக்காக வேடனுக்குத் தன் தொடையைச் சிபிச் சக்கரவர்த்தி அரிந்து கொடுத்தான்.

"வாடிவந்த பச்சினுக்கு வாளா லவனுடம்பை

தேடிவந்த வேடனுக்குத் துடையரிந் தீந்தவன்காண்" (Muthukutti Swamigal, 1963)

பஞ்சபாண்டவர்களின் மனுநீதத்தை மகாபாரதம் கூறுகிறது. பஞ்சபாண்டவர்களின் நிலங்களை அபகரித்து காண்டாவனம் எனும் காட்டைக் கொடுத்தார்கள். "நல்லவர்கள் நல்லாவார்" என்ற அகில வாக்கின்படி பஞ்சவர்களின் நல்ல குணங்களால் இந்திர பிரஸ்தமாக்கி வாழந்தார்கள். மனுநீதம் தவறிய துரியோதனனின் நாடு பஞ்சத்தில் வறண்டு போனது.

இராசநீதம் மன்னனின் வெற்றிக்கும், நல்வாழ்க்கைக்கும் அடிப்படையாக அமைகிறது. இன்றைய மன்னர்கள் சுய நலத்திற்காகப் பிற உயிர்களைப் பலி கொடுக்கின்றனர். மன்னனின் நீதங்களாக அகிலம், நீதி தவறாமல் ஆட்சி செய்வது, சுயநலம் இல்லாமல் ஆட்சி செய்வது, நாட்டின் பொது சொத்துக்களைப் பராமரிப்பது, கோவில் குளங்களைப் பராமரிப்பது, வழக்குகளை நீதி முறைப்படி நின்று ஆராய்வது என்பனவற்றைக் கூறுகின்றது.

"எளியோர் வலியோ ரென்றெண்ணி மிகப்பாராமல்

களிகூர நன்றாய்க் கண்டவழக்கே யுரைப்பார்" (Muthukutti Swamigal, 1963).

என்ற வரிகள் உணர்த்துகின்றன. மன்னர்கள் வரும் வழக்குகளின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து தீர்ப்புக் கொடுத்தனர். இராசநீதத்தால் கொற்கைப் பாண்டியன் தன் கையை இழந்தான். மனுநீதிச் சோழன் பசுவுக்காகத்தன் மகனைத் தன் தேர்க்காலில் கொன்றான். கண்ணகிக்குத் தன்னை

அறியாமல் அநீதி இழைத்ததற்காகப் பாண்டியமன்னன் தன் உயிரை விட்ட செய்தி எல்லாம் இராச நீதத்தையே பறைசாற்றுகிறது.

## மன்னன் வரிவிதிக்கும் முறை

நீதத்தோடு மன்னன் சிறப்பாக ஆட்சி செய்ததினால் மக்கள் இன்பமுடன் வாழ்ந்தனர். அரசன் எவ்வழி குடிமக்களும் அவ்வழியே என்பார்கள். மன்னன் மக்களுக்கு வரும் வருமானத்தை ஆறு பகுதிகளாகக் கூறிட்டு ஒரு பகுதியை வரியாக வாங்கினான். ஆறில் ஒருபகுதியை வரியாகத் தர மறுத்தாலும் மன்னன் மறுத்துக் கேட்கமாட்டான் என்பதை அறிய முடிகிறது.

"ஆறிலொரு கடமை அதுதரவே மாட்டோமென்று

மாறொருவர் சொன்னால் மன்னன்மறுத் தேகேளான்" (Muthukutti Swamigal, 1963)

பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து வரி கொடுத்தால் இரண்டு ஆண்டுகள் பொறுத்துத் தாருங்கள் என்பான். கோவில் சிவாலயங்கள் சேவித்துத் தினம் தினம் தான தர்மங்களைச் செய்து இராசநீதத்தோடு அரசாண்டு இருந்தான் என்பதும் அறிய முடிகிறது.

## மனுநீதம்

மன்னன் சிறப்பாக ஆட்சி செய்ததால் மக்கள் செல்வம் பெருகி சிவ நினைவு மாறாமல் அன்றாட செயல்களைச் செய்து ஒருவருக்கொருவர் அன்புற்று வாழ்ந்தனர்.

"ஒருவர்க் கொருவ ரூழியங்கள் செய்யாமல்

கருதல் சிவன்பேரில் கருத்தா யிருந்தனராம்

செய்யும் வழக்குச் சிவன்பேரி லல்லாது

வையம்வழக்கு வாரா தேயிருந்தார்" (Muthukutti Swamigal, 1963)

அவரவர் செய்யும் செயலை இறைத் தொண்டாக நினைத்து வாழ்ந்தனர். ஒருவருக்கொருவர் அலைச்சல் செய்யாமல் சிவசிவா என்று குடிபொருந்தி வாழ்ந்தனர். மக்கள் சுய ஒழுக்கமாக வாழ்ந்தனர். மனுநீதத்தில் பெண்களின் ஒழுக்கமும் பேசப்படுகிறது.

"கணவன் மொழியக் கலவுமொழி பேசாத

துணைவி நிலைமை சொல்லுவே னம்மானை" (Muthukutti Swamigal, 1963)

உலகத்தின் இயக்கம் பெண்கள் தான். எனவே தான் பெண்களை சக்தி என்று அழைப்பர். அப்படிப்பட்ட பெண் தன் நிலையை இழந்தால் இவ்வுலகத்தின் இயக்கம் சுழற்சி எல்லாம் தலைகீழாகப் போய்விடும். எனவே தான் மனுநீதத்தில் பெண்ணைப் பற்றி அகிலம் பேசுகிறது. பெண்கள் நல்லது கெட்டது பற்றி ஆராய்ந்து செயல்பட வேண்டும். பெண்களின் எண்ணங்களும் செயலும் கற்கதவு போலே திடமாக இருந்தால் அக்குடும்பம் சிறக்கும். பெண்கள் தன்நிலை தவறி வாழ்ந்தால் ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே என்று கூறுவது போல் ஆகிவிடும். பெண்கள் தங்கள் கடமையில் தவறாது நின்றதை,

"அன்பாகப் பெற்ற அன்னை பிதாவதுக்கும்

முன்பான சோதி முறைபோ லுறவாடி" (Muthukutti Swamigal, 1963)

பெண்கள் திருமணத்திற்கு முன் பெற்றோர் சொல் கேட்டு அவர்களுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தனர். திருமணத்திற்குப்பின்

"அரசன் துயில் ஆராட்டி வோராட்டிக்

கரமா னதுதடவிக் கால்தடவி நின்றிடுவாள்" (Muthukutti Swamigal, 1963)

இல்லற வாழ்க்கையில் கணவனைக் கண்கண்ட தெய்வமாக மதித்து வாழ்ந்தனர். அன்றையகாலப் பெண்கள் கணவன் துயிலத் தாலாட்டி அவனுக்கு வேண்டி பணிவிடைகளைச் செய்து கணவனை உயிரை விடவும் மேலாகப் போற்றி நின்றாள். குறுந்தொகைப் பாடல்

“வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்

மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்”

என்று வாழ்க்கைநிலை கூறுகிறது (Durai Rasaram, 2005).

## கற்பு நிலை

கற்பு என்பது உளம் சார்ந்தது. நியாயவானுக்குச் சொல் முக்கியம் நல்ல பெண்ணுக்குக் கற்பு முக்கியம் என்பர். கற்பைப் பற்றித் தொல்காப்பியம்,

“உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்

செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந்த தன்றெனத்” (Ilampuranar, 2000)

என்கிறது. உயிரை விடச் சிறந்தது நாணம் என்றும், நாணத்தை விடச் சிறந்தது கற்பு என்றும் குறிப்பிடுகிறது. திருவள்ளுவரும் இல்வாழ்க்கையில் கற்பு என்னும் உறுதிநிலையில் நிற்கும் பெண்ணை விடப் பெருமை உடையது எதுவும் இல்லை என்கிறார்.

“பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மை உண்டாகப் பெறின்” (Subbu Reddiyar, 2005)

கற்பு என்பது பெண்களிடம் இயல்பாக இருக்க வேண்டிய ஒன்றாகக் கருதப்படுகிறது. கற்பின் பெருமையை அகிலத்திரட்டு,

“கற்புள்ள சாணாத்தி கதறியுன்னைச் சாபமிட்டால்

அப்படியுமுன் கோட்டை அழிந்து பொடியாகுமடா

சாணாத்தி யுன்னைச் சாங்கமுடன் சபித்தால்

வாணாளழியு முந்தன் வம்மிசங் கடான்முடியும்” (Muthukutti Swamigal, 1963)

கற்புடைய பெண் சாபமிட்டால் கோட்டை அழிந்து பொடியாகும். வாழ்நாள் குறையும். வம்சம் கரைசேராது என உரைக்கிறது அகிலத்திரட்டு.

“கற்கதவு போலே கற்பு மனக்கதவு

தொற்கதவு ஞானத் திறவுகோ லம்மானை” (Muthukutti Swamigal, 1963)

பெண்கள் உண்மை உடையவர்களாகவும், தம் அந்தரங்க வாழ்வு பற்றியும், தெய்வத்திடம் கூடப் பேசுவது தவறு என்ற உணர்வுடையவளாக இருக்க வேண்டும் என்று உரைக்கிறது.

## மனைவியின் கடமைகள்

பண்டைய காலத்தில் கணவனை மனைவி சுவாமி என்றும், பிராணநாதன் என்றும், மணாளன் என்றும், கண்ணாளன் என்றும் அழைத்தனர். இல்லற வாழ்க்கையில் மனைவி ஆற்ற வேண்டிய கடமைகளாக,

“மயன்ற ஒரு சாமம் மங்கை யெழுந்திருந்து

முகத்து நீரிட்டு நான்முகத் தோனையுந் தொழுது

அகத்துத் தெருமுத்த மலங்காரமாய் பெருக்கி

பகுத்தாக நித்தம் பாரிப்பார் பெண்ணார்கள்” (Muthukutti Swamigal, 1963)

கணவன் உண்ட பின் உண்டு, அவன் தூங்கிய பின் தூங்கி அவன் துயில் எழும் முன் துயில் எழுந்து, வீட்டின் முன் கோலம் போட்டு தன் கடமைகளைச் செம்மையுடன் செய்து வாழ்ந்தார்கள். மனைவி செம்மையற்று ஏறுமாறாக நடந்தால் கணவன் துறவி ஆகுவதே சிறந்த நெறி ஆகும்.

## கணவன் மனைவி உறவுநிலை

மனித வாழ்வில் முக்கியமான ஒன்று கணவன் மனைவி உறவு ஆகும். கணவனும் மனைவியும் குடும்பம் என்னும் கோவிலைக் கட்டமைக்கின்றனர். கணவனும், மனைவியும் இறுதிவரை ஒற்றுமையோடு வாழ்ந்தால் தானாக வீடு பேறு வரும் என்பது தமிழரின் கொள்கையாகும். கணவனைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றினர் என்பதை,

“கணவன் மொழியக் கலவு மொழி பேசாத

துணைவி நிலைமை சொல்லுவே னம்மானை” (Muthukutti Swamigal, 1963)

பெண்கள், கணவன் மொழிக்கு மறுமொழி இல்லாமல் கணவனை ‘கண்அவன்’ என்று நினைத்து வாழ்ந்தனர். மறுமொழி பேசும் பெண்ணை பட்டினத்தார், “பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு” என்று பாடுகிறார். ஔவையாரும் ‘எதிரில் நின்று பேசும் மனையாளின் பேய் நன்று’ என்ற கூறுகின்றார். கணவனையே தெய்வமாகக் கருதி வழிபடுபவள் விரும்பி வேண்டினால் மழை பொழியும் என்கிறார் வள்ளுவர்.

“தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை”

என்ற குறள் விளக்குகிறது (Subbu Reddiyar, 2005). கணவனும் மனைவியும் இல்லறத்தில் சமம் என்பதைக் காட்ட வைகுண்டர் உணவு பழக்கத்தில் மாறுதல்கள் ஏற்படுத்தினார். ஆண் உண்டபின் தான் பெண் உண்ண வேண்டும் என்ற நிலையில் இருந்த பெண்களை ஆண்களோடு சரி சமமாக ஒரே நேரத்தில் ஒரு சேர உண்ணவும் வைத்தார் என்பதை அவர் வாய்மொழியாக அறிய முடிகிறது.

## முடிவுரை

ஒருவர் மேம்பட்ட வாழ்வு வாழ நீதங்கள் துணைபுரிகின்றன. முற்காலத்தில் நாட்டை ஆண்டவர்களும் நாட்டில் வாழ்ந்த மக்களும் ஒழுக்கத்துடன் வாழ்ந்தமையை அகிலத்திரட்டு பேசுகிறது. பிற்காலத்தில் நீதம் என்றும் நெறி தவறியதால் மக்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையின்றி ஆண் பெண்ணை அடிமைப்படுத்துவதும், பெண் ஆணை அடிமைப்படுத்துவதும் சமுதாயத்தில் உருவாவதை காணமுடிகிறது. இம்முறைகள் மாறி சமூகத்தில் மானுடம் சிறக்க வேண்டும் என்பதே வைகுண்டரின் விருப்பமாகும் என்பதை அகிலத்திரட்டின் வாயிலாக அறிய முடிகிறது. ஆய்வின் மூலம் மனிதன் தன் பண்பு நெறி என்னும் நன்னெறியை உலக மக்கள் உணர்ந்து நடக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துவதாக அமைகிறது.

## References

Durai Rasaram (2005) Kurunthogai, Thirumagal Nilayam, Chennai, India

Ilampuranar (2000) Tholkappiyam Porulathikaram, Saradha Pathippagam, Chennai, India

Muthukutti Swamigal, P. (1963) Akilathirattu Ammanai, Das Press, Nagercoil, India

Subbu Reddiyar, (2005) Thirukural Thelivu, Sura Books, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License